மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்ட முன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

8. அறிவிப்புகள்.

(அ) முதல் துணை நிதிநிலை அறிக்கை 1986-87.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

1986-87 ஆம் ஆண்டுக்கான கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகளைப் பேரவை முன் மொழிவது குறித்து ஆளுநரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப் பெற்றுள்ளது:—

MESSAGE.

In pursuance of Article 203, Clause (3) of the Constitution of India, I, Sundarlal Khurana, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the demands for further grants for the year 1986-87 as detailed in the annexure enclosed.

(9) முதல் துணை நிதிநிலை அறிக்கை 1986-87 விவாதமும், வாக்கெடுப்பும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *1986-87* ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கை மீது விவாதம்.

பேரவை விதிகளின்படி இன்று விவாதமும், நிதியமைச்சர் அவர்களின் பதிலுரையும் ஒரு மணிக்கு முடிந்து மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு எடுக்கப்படும்.